Case No. CC.84/2022

PW1– வந்தனா

Dated: 24.01.2024

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு. சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தற்போது சட்டம் படித்து வருகிறேன் . எனக்கும் என் கணவர் அ .சா.4 பிரேம்தீப் சிங் என்பவருக்கும் திருமணம் ஆகி 6 வருடங்கள் ஆகிறது. 6 வருடங்களாக லேடீஸ் சீட் செல்லும் வழியில் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான் . அங்கே சாக்லெட், ஆயில் மற்றும் நறுமண பொருட்கள் ஆகியவற்றை வியபாரம் செய்து வருகிறோம் என்றால் சரிதான் . எனது கணவரின் தாத்தா பவானிசிங் என்பவரின் பெயரில் யூகேலிப்டஸ் தைலம் கம்பனி இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த கம்பனியில் தயாரிக்கும் பொருட்களை எங்களுக்கு சொத்தமான 4 கடைகளில் வெளியே வியாபாரம் செய்து வருகிறோம் என்றால் சரிதான் . ஏற்காட்டில் விலையும் பொருட்களுடன் சேர்த்து சாக்லெட்டையும் வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். லேடீஸ் சீட்டில் வைத்துள்ள கடை எங்கள் சொத்த கடை என்றால் சரிதான். 15 முதல் 20 வருடங்களாக அந்த கடை இருக்கிறது. ஆஜர் எதிரி எங்கள் கடைக்கு பக்கத்தில் கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். ஆஜர் எதிரியின் கடையில் சாக்லெட் மற்றும் நறுமண பொருட்கள் வியாபாரம் செய்கிறார் என்றும் , எங்கள் கடைக்கும் அவரது கடைக்கும் இடையே ஒரு சுவர் மட்டுமே உள்ளது என்றால் சரிதான். எங்களுக்கும், ஆஜர் எதிரிக்கும் வியாபாரம் சம்மந்தமாக எந்த பிரச்சனையும் இல்லை. நான் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் . அந்த புகாரில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் . சம்பவம் நடந்த தேதியில் இரவு 09.30 மணிக்கு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் . என்னுடன் எனது கணவர், அண்ணன் உடன் வந்தனர். என்னுடைய புகாரில் எதிரிக்கும், எங்களுக்கும் பக்க பக்கத்து கடை என்பதால் அடிக்கடி வியாபாரம் சம்மந்தமாக சின்ன சின்ன தகராறு வரும் என்றும், இது சம்மந்தமாக முன் விரோதம் இருக்கிறது என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . மீண்டும் அதே நாள் இரவு 10.30 மணிக்கு எழுத்து பூர்வமான புகார் கொடுத்தேன் . புகாரை நான் சொல்ல சொல்ல எனது மாமியார் எழுதினார் . வழக்கு சம்மந்தமாக போலீசார் எனது மாமியாரை விசாரித்தார்கள் . மதியம் சுமார் 02.00 மணியளவில்

போலீசார் வந்து எனது மாமியாரை விசாரித்தார்கள் . புகார் கொடுத்த பிறகு மறுநாள் 09.30 மணிக்கு காவல் நிலையம் சென்றோம் . மறுநாள் காலை சென்றபோது இரவு கொடுத்த புகாரை மறுபடியும் திருப்பி எழுதிக்கொடுத்தோம் . மறுநாள் காலை 09.30 மணிக்கு காவல் நிலையம் சென்றோம் பிறகு மதியம் 12.30 மணிக்கு வீட்டிற்கு வந்துவிட்டோம் அன்று முழுவதும் காவல் நிலையம் போகவர இருந்தோம் . பின்னர் மறுபடியும் மாலை 03.30 மணிக்கு காவல் நிலையம் சென்றோம் . பிறகு மாலை 05.30 மணிக்கு வீட்டிற்கு வந்துவிட்டோம் . மதியம் 12.30 மணி முதல் மாலை 03.30 மணி வரை காவல் நிலையம் செல்லவில்லை என்றால் சரிதான் . எனது கணவர் போனரா என்றால் அவர் வெளியே போனார் காவல் நிலையம் போனாரா என்று குறிப்பிட்டு தெரியவில்லை. காவல் நிலையம் போனதாகவும் எனக்கு தெரியவில்லை . மதியம் 01.00 மணிக்கு நான் புகார் கொடுக்கவில்லை என்றால் கொடுத்திருக்கலாம் . சாட்சி தற்போது பகல் 12.30 மணி முதல் 01.00 மணிக்குள் புகார் கொடுத்திருக்காலம் என்று கூறுகிறார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இரவு புகார் கொடுத்ததாக சொல்வது தான் உண்மை என்றும் , மறுநாள் புகார் கொடுத்ததாக சொல்லுவது தவறு என்று சொன்னால் சரியல்ல . மறுநாள் என் மாமியார் மூலம் ஒரு புகாரை எழுதி அதைக்கொண்டுபோய் காவல் நிலையத்தில் கொடுத்தேன் . நான் கடைக்கு செல்லும் போதேல்லாம் எதிரி என்னை அவமதிக்கும் வகையில் நடந்துகொள்வார் என புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். 27.05.2022–ம் தேதியன்று இரவு 08.45 மணிக்கு ஏற்காடு Flower Show வை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்தோம் . எதிரி என் தம்பி கிரேனின் காலில் இருச்சக்கர வாகனத்தை ஏற்றியதாக புகாரில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. அந்த சமயம் 2 மற்றும் 3 எதிரிகள் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான் . 1 ம் எதிரி போன் செய்ததும் 2 நிமிடங்கள் கழித்து அவர்கள் வந்துவிட்டார்கள். இந்த விவரத்தை புகாரில் சொல்லியுள்ளேன் . நான் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணையில் சொன்ன விவரங்களை தான் போலீசார் விசாரணையின் போது சொல்லியுள்ளேன் . நித்திஷ்குமார் என்னை தள்ளிவிட்டதாகவும் என் கணவரை கட்டையால் நித்திஷ் மற்றும் பிரசன்னகுமார் இருவரும் அடித்ததாகவும் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான் . முதுகின் நடுவில் எதிரி அடித்ததில் எனக்கு இரத்தம் கட்டிவிட்டது . என் கணவரை எதிரி குத்திய கூர்மையான ஆயுதம் என்னவென்றால் கம்பியாக கூட இருக்கலாம். எந்த பொருளை

கொண்டு குத்தினார் என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது . புகாரில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். புகாரில் பின்னர் அடையாளம் தெரிந்து பெயர் தெரியாது நபர் ஒருவர் கார் கண்ணாடியை உடைத்ததாக புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . இந்த விவரத்தை போலீசார் விசாரிணையின் போது சொல்லியுள்ளேன். அடையாளம் தெரியாத நபர் கல்லை எடுத்து கொடுத்தார்கள் . நித்திஷ், பிரசன்னகுமார் இருவரும் கார் கண்ணாடியை உடைத்தார்கள் . சாட்சி தற்போது நித்திஷ் என்பவர் மட்டும் உடைத்ததாகவும் ஆனால் இருவரும் அங்கே இருந்ததாகவும் சொல்லியுள்ளார் . இருவரும் சேர்ந்து கண்ணாடியை உடைக்கவில்லை. புகாரில் என்னுடைய அண்ணனின் Chain காணாமல் போய்விட்டதாகவும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த Chain திரும்ப கிடைத்ததா என்று தெரியாது . அதை திருப்பி வாங்க வேண்டும் என்று எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான் . நான் திருமணமாகி வந்தது முதல் எதிரி கடை வைத்திருக்கறார் என்பது தெரியும். நாங்கள் செய்து வரும் தொழிலை எதிரியும் செய்து வருவதால் வியாபார சம்மந்தமாக ஏற்கனவே எங்களுக்கும் எதிரிக்கும் முன் விரோம் இருந்து வருகிறது என்றும், சம்பவ தினம் Flower Show விற்கு சென்று வரும்போது ஒரு விபத்து ஏற்பட்டது என்றும் அதில் எனக்கு ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி காவல் நிலையத்தில் உள்ள செல்வாக்கை பயன்படுத்தி எதிரியின் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் காரின் முகப்பு கண்ணாடி உடைந்ததில் இவ்வளவு கொழப்பங்கள் இருக்கிறது என்றால் சரியல்ல . எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் எனது பொய்யான புகாரின் பேரில் காவல் துறையினர் தவறாக வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-. M. Mathivanan,
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.